**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்**

முன்னிலை : **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,**

நீதித்துறை நடுவர், இரணியல்

**2026** ஆம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் **07**ஆம் நாள் **செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 89/2020**

## CASE SUMMARY

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">A2 Remanded from : 20.01.2020<br>to : 29.02.2020</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">20.02.2020</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">16.01.2024</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code.</td><td colspan="3">U/s. 348 BNSS Petition allowed<br>on 06.04.2026</td></tr>
<tr><td rowspan="4">6</td><td rowspan="4">Date of examination in Chief and Cross - examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross-Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>06.04.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.2</td><td>06.04.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.3</td><td>06.04.2026</td><td>06.04.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the Court</td><td colspan="3">06.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be</td><td colspan="3">Nil</td></tr>
</table>

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:00 +0530

| | | |
|---|---|---|
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | N.A |

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**மண்டைக்காடு** காவல் நிலையம்,<br>குற்ற எண். **33/2018** | .......குற்றமுறையீட்டாளர், |
| / எதிர் / | |
| வெங்கடேஷ் வயது 27/2018<br>த/பெ. அசோக்குமார்<br>கன்னமங்கலம், வெள்ளிசந்தை | .........1ம்குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| வெங்கடேஷ் வயது 23/2018<br>த/பெ. மணி என்ற ஊத்திமணி,<br>ஈத்தன்காடு, வெள்ளிசந்தை | .........2ம்குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| ஐயப்பன் வயது 41/2018<br>த/பெ. தங்கசுவாமி<br>ஈத்தன்காடு, வெள்ளிசந்தை | .........3ம்குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| மணிகண்டன் வயது 49/2018<br>த/பெ. கணபதி<br>சூரபள்ளம், வெள்ளிசந்தை | .........4ம்குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020

இவ்வழக்கு **20.02.2020** அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு இன்று **07.04.2026** ஆம் தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை **உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், 1,3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.சிவகுமார்** அவர்களும், **2ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. R.ஜெயராம்** அவர்களும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.அமலதாஸ்** அவர்களும், ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **07.04.2026** நீதிமன்றம் பிறப்பிக்கும்.....



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:06 +0530

## தீர்ப்புரை

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும், பாரதிய சாக்சிய அதிநயம் 2023 என்பது பா.சா.அ 2023 என்றும், பாரதிய நாகரிக் சுரக்ச சங்கீதா 2023 என்பது, பா.நா.சு.ச.2023 என்றும் பதிவிடப்படுகின்றது.

**1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

கடந்த 26.07.2018 ஆம் தேதி விடியற்காலையில் நடுவூர்கரை அருள்மிகு சிவசக்தி திருக்கோயில் வளாகத்தில் மேற்கு பக்கம் கலையரங்க மேடையின் தென்பகுதியில் நின்ற சுமார் 8 அடி உயரமும், 6 இஞ்ச் அகலமும் கொண்ட சுமார் ரூபாய் 3,000/– மதிப்புள்ள சந்த மரத்தினை 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் வெட்டி திருடி எடுத்துச் சென்றதாகவும், மேற்படி மரத்தினை சிறு சிறு கட்டைகளாக 12 எண்ணமாக வெட்டி 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் விற்பனைக்கு கொடுத்தாகவும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் திருட்டு பொருள் என்று தெரிந்தும் மேற்படி மரத்துண்டுகளை விலைக்கு வாங்கிய ஒரு தகவல் **குவி.மு.ச 1973 பிரிவு 154(1)ன்** கீழ் ஒரு தகவல் பெறப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு **1 முதல் 3** வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் செய்கையானது இதச 1860 பிரிவு **379உ/இ34ன்** கீழும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது இதச 1860 பிரிவு **411ன்** கீழும், தண்டிக்கத்தக்கவர்கள் என்று **கு.வி.மு.ச 1973 பிரிவு 173(2)**–ன்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக நகல் வழங்குதல்**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச 1973பிரிவு 240(1) ன்கீழ் குற்றச்சாட்டு வனைதல்**

**(1)** வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின்

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:14 +0530

குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **1 முதல் 3 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இ.த.ச1860 பிரிவு **379உ/இ34**ன் படியும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச1860 பிரிவு **411**ன் படியும், தனித்தனியே குற்றச்சாட்டு வனையப்பட்டது.

(2) வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **கு.வி.மு.ச 1973பிரிவு 240(2)** ன் படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை எனக்கூறி குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு **கு.வி.மு.ச 1973 பிரிவு 242** ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**4. பா.நா.சு.ச 2023 பிரிவு 265ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:-**

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலுள்ள சான்றாவணங்கள் மற்றும் **அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.12** வரையிலான சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன.

**5. பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவுதல்**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் **பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவ** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தங்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாங்கள் நிரபராதிகள் என்றும் பதில் அளித்தார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார்கள். எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சியம் இல்லை என முடிக்கப்பட்டும் இருதரப்பு வாதுரைப்பும் கேட்கப்பட்டது.

**6. பா.நா.சு.ச 2023 பிரிவு 266-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.**

கற்றறிந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வழக்கானது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக பொய்யாக போடப்பட்ட வழக்கு என்று

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:25 +0530

கூறப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் **1 முதல் 3 வரையிலான** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான **இ.த.ச 1860 பிரிவு379 உ/இ34**ன் கீழ் குற்றச்சாட்டுகளும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான **இ.த.ச 1860 பிரிவு411**ன் கீழ் குற்றச்சாட்டுகளும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

**8. பிரச்சனைக்கான தீர்வுகள்**

**சாட்சியங்களில்.......**

(2) ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான **அ.சா.1 ஸ்ரீகுமார், அ.சா.2 முகமது ஷா** தங்களது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**புலனாய்வு**

(3) **அ.சா.3 நித்தியா தலைமை காவலர் –** கூடுதல் சாட்சி புலனாய்வு அதிகாரிக்கு வேண்டி சாட்சியம் அளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன்** கீழ் முறையாக ஒரு புகார்மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XII** ன் கீழ் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர், வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் இருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலம், தடய பொருள்கள் மற்றும் வல்லுநர் சாட்சியம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளதில் இருந்து இந்நீதிமன்றம் மேற்படி புலன்

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:38 +0530

விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில்தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**9. இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு**

(1) ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது.

(2) இந்த வழக்கை பொறுத்தவரை **இந்த வழக்கில் நடுவூர்கரை அருள்மிகு சிவசக்தி திருக்கோயில் வளாகத்தில்** நின்ற சந்தனமரத்தை வெட்டி திருடி சென்றார்கள் என்பதையும் அதனை தொடர்ந்து மேற்படி தடய பொருள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடமிருந்து இருந்து தகுந்த சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டதா என்பதை நிரூபிக்கவேண்டும்.

(3) திருட்டு சம்பந்தமான வழக்கை பொறுத்தவரை வழக்கில் சூழ்நிலை சாட்சிகள் மற்றும் சந்தர்ப்ப சாட்சிகளை மட்டுமே வைத்து **சங்கிலித்தொடர் தத்துவத்தை** உறுதிப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் இந்த வழக்கில் சூழ்நிலை சாட்சிகளின் அடிப்படையில் உருவாகும் சங்கிலி தொடர் தத்துவமானது பயன்பாட்டுக்கு வரும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**10. இந்த வழக்கை பொருத்தவரை சட்டப்பிரிவான**

**இதச 1860 பிரிவு 379–ஐ பொறுத்து**

**முதலாவதாக –** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மேற்படி கோவில் வளாகத்தில் நின்ற சந்தன மரத்தை வெட்டி திருடினார்களா?

**இதச 1860 பிரிவு 411ஐ பொறுத்து**

**இரண்டாவதாக – 4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் திருட்டு பொருள் என்று தெரிந்தும்

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:54:56 +0530

மேற்படி சந்தன மரத்தை விலைக்கு வாங்கினாரா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**ஆய்வும் அதற்கான காரணமும்**

***11. மேற்சொன்ன இரண்டு வினாவிற்கான ஆய்வும் அதற்கான காரணமும்***

(1) ஒரு வழக்கில் அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி** ஆகியவற்றை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **பா.சா.அ 2023 பிரிவு 104 மற்றும் பிரிவு 2ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

**(2) முதல் தகவல் அறிக்கையில் ......**

முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2ஆக அ.சா.3ன்** மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றம் நடந்ததாக கூறப்படும் தேதி **26.07.2018** ஆம் தேதி **இரவு 23.00 மணி முதல் 27.07.2018ஆம் தேதி 04.30 மணி வரை**. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது **27.07.2018** ஆம் தேதி **19.00** மணி. குற்றமானது காவல் நிலையத்தில் தகவல் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட நேரத்தையும், ஒப்பிட்டு பார்க்கும் போது முதல் தகவல் அறிக்கை பெறுவதில் காரணமற்ற காலதாமதம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(3) இந்த வழக்கில் புகார்தாரரான பட்டியல் சாட்சி 1 பாலசுப்பிரமணியன் வழக்கு விசாரணைக்கு முன்பு இறந்துவிட்டதால் அவர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அரசுத்தரப்பில் கூறியுள்ள சங்கதிகளில் **அ.சா.ஆ.1 ஆன புகார் மனு**வில் குற்றம் நடந்த

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:05 +0530

நேரம் மற்றும் இடத்தை பொறுத்து அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(5) மேற்சொன்ன கருத்தில் கொண்ட சங்கதிகளை பொறுத்து **இந்த வழக்கில் ஒரு திருட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது என்று** ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் அரசுத்தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

12. **குற்ற ஏற்பையும் அது தொடர்பான கண்டுபிடிக்கப்பட்ட புதிய சங்கதிகளும்......**

(1) இந்த வழக்கில் முக்கிய பங்களிப்பாக சாட்சியங்களில் சொல்லப்பட்ட குற்ற ஏற்பையும் அது தொடர்பான கண்டுபிடிக்கப்பட்ட புதிய சங்கதிகளை பொறுத்து அரசுத்தரப்பில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான **அ.சா.1 ஸ்ரீகுமார், அ.சா.2 முகமதுஷா** ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் தங்களிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் தங்களுடையது இல்லை என்று அரசு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(2) **அ.சா.3** தனது சாட்சியத்தில் ஆய்வாளர் **அ.சா.1 ஸ்ரீகுமார், அ.சா.2 முகமதுஷா** ஆகியோர்கள் முன்னிலையில் 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்து அதன் அடிப்படையில் தடயபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார் என்று சாட்சியமளித்துள்ளதில் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் முற்றிலும் மாறுப்பட்டுள்ளதால் மேற்படி ஆய்வாளர் அவர்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொறுத்து அதன் நம்பகத்தன்மை குறித்து இந்நீதிமன்றத்திற்கு ஒரு நியாயமான சந்தேகம் எழுகிறது என்பதை கருத்தில் கொள்கிறது.

(3) **பா.சா.அ2023 பிரிவு 22** குற்ற ஏற்புரையை வகை செய்திருந்தபோதும் இந்த வழக்கை பொறுத்தவரை **நீதிமுறை சாரா** ஒரு குற்ற ஏற்புரையானது ஒரு தகுதி குறைந்த சான்றாவணமாகும். மேலும், **பா.சா.அ2023 பிரிவு 23** ஆனது ஒரு காவல் அதிகாரி முன்னிலையில் கொடுக்கப்படும் ஒரு குற்ற ஏற்புரையை அந்த நபருக்கு எதிராக எந்த ஒரு



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:14 +0530

வழக்கிலும் பயன்படுத்த முடியாது என்று உள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(4) மேற்சொன்ன பிரிவுக்கு வரம்புரையாக உள்ள **பா.சா.அ2023 பிரிவு 23** ஆனது உறுதிப்படுத்துதல் தத்துவத்தின்படியும் (**Doctrine of Conformation**) மேற்படி குற்ற ஏற்பரையின்போது கூறப்படும் ஒரு புதிய சங்கதியைப் பொறுத்தும் அது தொடர்பான கண்டுபிடிப்பு குறித்தும் மேற்படி கண்டுபிடிப்புகளை சாட்சியங்களிலும் தனித்துவத்திலும் கொண்டு வந்தாலன்றி ஏற்புடையதல்ல என்று கூறியுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(5) இந்த வழக்கில் குற்ற ஏற்புரையும், அதனை தொடர்ந்து புதிய சங்கதிகள் எதுவும் இந்நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி **அ.சா.1 ஸ்ரீகுமார், அ.சா.2 முகமதுஷா** ஆகியோர்கள் சாட்சியம் முற்றிலும் முரண்பட்டுள்ளதாலும், மேற்படி சாட்சிகள் அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு எந்த வகையிலும் வலுவூட்டவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(6) மேலும், **பா.சா.அ2023 பிரிவு 23ன்**படி காவலர் பொறுப்பில் உள்ள ஒரு நபர் ஒரு தகவல் கொடுத்திருக்க வேண்டும் மேற்படி தகவலின் அடிப்படையில் ஒரு புதிய சங்கதியானது கண்டுபிடிக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட புதிய சங்கதியானது மேற்படி வழக்கு சங்கதியோடு தொடர்புடைய சங்கதியாக இருக்கவேண்டும். மேற்படி தொடர்புடைய சங்கதியை சாட்சியத்தில் அரசுத்தரப்பு கொண்டுவரவேண்டும். மேற்படி சாட்சியமானது தனித்துவமானதாகவும் இருக்கவேண்டும் என்றால் மட்டுமே ஏற்றுக்கொள்ளமுடியும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும் என்பதை **மாண்புமிகு உச்ச நீதிமன்றம் துளசிராம்சாது 2012 (3) DMC 591 (Supreme Court)** வழக்கில் எடுத்துக்கூறிய வழிக்காட்டுதல்களையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதாவது மேற்சொன்ன வழக்கின் சாராம்சமானது பின்வருமாறு புரிந்துகொள்ளப்படுகிறது.

| |
|---|
| Sec. 27 Evidence Act = **C**ustody of accused + **I**nformation + **D**iscovery + **R**elevant fact + **E**vidence + **D**istinct fact. |

Judicial Magistrate Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:23 +0530

மேலும் இந்நீதிமன்றம் மாண்பமை Privy counsel –ன் தீர்ப்பான புளுக்குறி கோட்டையா AIR 1947 PC 67 மற்றும் உச்சநீதிமன்றத்தின் Mottai Thevar AIR 1952 MAD 586 Up Vs Deoman AIR 1960 SC 1125, Mani Vs TN 2008 (1) SCR 228, Mustikem alis sirajideen Vs Rajasthan, 2011(11) SCC 724, State of HP Vs Jeet Singh, , State of NCT Delhi Vs Navjot sandhu at Afsan guru 2005(11) SCC 600, Tofansing vs State of Tamil Nadu ஆகிய தீர்ப்புகளின் வழிக்காட்டுதல்களையும், கோட்பாடுகளையும் கருத்தில் கொண்டும் இந்த வழக்கினை சீர்தூக்கி பார்க்கும்போது மேற்படி குற்ற ஏற்புரையின் எந்த ஒரு பகுதியையும் நிரூபிக்கவோ அல்லது குற்ற ஏற்புரையில் ஒரு புதிய சங்கதி குறித்த நிரூபணத்தையோ அரசுத்தரப்பில் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(7) மேலும், இந்த வழக்கை பொறுத்தவரை புதிய சங்கதியைப் பொறுத்து எந்தவித கண்டுபிடிப்புகளும் முழுமையான அளவில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதாலும் அரசுத்தரப்பு கண்டுபிடிக்கப்பட்ட சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்குமான அடிப்படை சங்கதிக்குமான தொடர்பினை நிரூபிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. குற்ற ஏற்புரையில் உள்ள சங்கதிகள் முழுமையான சூழ்நிலை சாட்சியங்கள் ஆகும். மேற்படி சூழ்நிலை சாட்சியங்கள் முழுமையான ஒத்தேற்பு இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும்.

(8) மேற்படி அரசுத்தரப்பில் திருட்டு குறித்த சங்கதிகளில் நிரூபிக்கப்பட்டவைகளில் மேற்படி திருட்டு சம்பவத்தில் இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் ஈடுபட்டார்கள் அல்லது இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் காரணம் என்றும் அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட எந்த ஒரு சாட்சியும் தங்களது சாட்சியங்களில் எந்த இடத்திலும் சாட்சியமளிக்காத நிலையில் இந்நீதிமன்றம் இந்த வழக்கில் இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இந்த வழக்கு சம்பவ நேரத்தில், வழக்குச் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றோ அவர்கள் தான் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற எந்தவித சாட்சியமும் அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:33 +0530

(9) புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்கினை தீர்வு காண இயலாது.

(10) **பா.சா.அ2023 பிரிவு 139ன்படி** ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் அரசுத்தரப்பில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக சேர்க்கப்பட்ட **அ.சா.1 ஸ்ரீகுமார், அ.சா.2 முகமதுஷா** இருவரும் இந்த வழக்கின் முக்கியமான நட்சத்திர மற்றும் உறுதியான சாட்சியாவார்கள். ஆனால் மேற்படி நபர்கள் இந்த வழக்கில் அரசுத்தரப்பை வலுவூட்டுவதற்கு போதுமான சாட்சியங்களை தராதபோது மற்ற சாட்சியங்கள் எவ்வகையிலும் அரசுத்தரப்பை உறுதிப்படுத்தாது என்பது இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**13. <u>இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :</u>**

(1) அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுத்தரப்பில் கூறியுள்ளதுபோல் **1 முதல் 3** வரையுள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் திருட்டை புரிந்தார்கள் என்றும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் திருட்டு பொருள் என்று தெரிந்தும் அதை விலைக்கு வாங்கினார் என்றும் எந்தவித சாட்சிய சான்றுகளும் இல்லை என்று கருத்தில் கொள்கிறது.

(2) இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் இந்த வழக்கில் ஒரு குற்றச் சம்பவம் அதாவது திருட்டு நடைபெற்றுள்ளது என்ற சங்கதியை பொறுத்து மட்டும் எந்தவித சந்தேகத்திற்கும் ஆட்படாத வண்ணம் தனது தரப்பை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டாலும் அரசுத்தரப்பு தனது தரப்பை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் அல்லது செய்தார்கள் என்பததையும் அவர்களுக்கு எதிராக1 முதல் 3 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீதான **இதச 1860 பிரிவு379உ/இ34**ஐ



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:40 +0530

Judicial Magistrate, Eraniel in C.C.

பொறுத்த குற்றச்சாட்டுகளையும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான இ.த.ச 1860 பிரிவு 411ஐ பொறுத்த குற்றச்சாட்டையும் மெய்பிக்கவில்லை என்றும் **பா.சா.அ2023 பிரிவு 2 மற்றும் பிரிவு 104ன்** படியும் **தீர்வு காண்கிறது.**

**14.வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீதான ஆய்வு**

இந்த வழக்கில் அரசுத்தரப்பில் **1 முதல் 3** வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக கூறப்பட்டுள்ள **இ.த.ச** 1860 **பிரிவு 379உ/இ34க்கான** எந்தவித சாட்சியங்களும், **4ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக கூறப்பட்டுள்ள **இ.த.ச** 1860 **பிரிவு 411**க்கான எந்தவித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**15. தீர்வு:-**

**(1) முடிவாக**, **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **பரமேஷ் த/பெ.அசோக்குமார், 2**ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வெங்கடேஷ் த/பெ.மணி என்ற ஊத்தி மணி**, 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஐயப்பன் த/பெ. தங்கசாமி** ஆகியோர்கள் மீதான **இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு379 உ/இ34**ஐ பொறுத்தும், 4ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **மணிகண்டன் த/பெ. கணபதி** மீதான **இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 411**ஐ பொறுத்தும், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால், மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தண்டிக்கத்தக்க **குற்றவாளிகள் இல்லை** என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(2) எனவே **1ம்** குற்றம் சுமத்தப்பட்ட நபரான **பரமேஷ் த/பெ.அசோக்குமார், 2**ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **வெங்கடேஷ் த/பெ.மணி என்ற ஊத்தி மணி**, 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ஐயப்பன் த/பெ. தங்கசாமி, 4**ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான **மணிகண்டன் த/பெ. கணபதி** ஆகியோர்களை மேற்படி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்தும், **பாரதிய நாகரிக் சுரக் ஷா சங்கீதா 2023 பிரிவு 271(1)ன்** படி வழக்கிலிருந்தும் **விடுதலை செய்தும்** தீர்ப்பளிக்கப்படுகிறது.

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:47 +0530

**16. பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு**

வழக்கில் சொத்துக்கள் ஆர்.பி.எண் 03/2019ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 சுமார் 36 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.2 ஆன சுமார் 23 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.3 ஆன சுமார் 32 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.4 ஆன சுமார் 29 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.5 ஆன சுமார் 24 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.6 ஆன சுமார் 29செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.7 ஆன சுமார் 28 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.8 ஆன சுமார் 26 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.9 ஆன சுமார் 32 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.10 ஆன சுமார் 27 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.11 ஆன சுமார் 24 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, அ.சா.பொ.12 ஆன சுமார் 30 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1, நீதிமன்ற பாதுகாப்பில் உள்ளதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் மேற்படி கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும், அவ்வாறு மேற்படி கோவில் நிர்வாகம் உரிமைகோரவில்லையெனில் விதிகளில் உள்ளதுபடி அரசுக்கு ஆதாயபடுத்துவதற்கு பா.நா.சு.ச 2023 பிரிவு 498ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

**17. பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396ன் கீழ் உத்தரவு**

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396** ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

**18. பா.நா.சு.ச 2023 பிரிவு 481– ன் கீழ் உத்தரவு**

வழக்கில் **பா.நா.சு.ச 2023 பிரிவு 481**–ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:55:54 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (07.04.2026)திறந்த இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:00 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | ஸ்ரீகுமார் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.2 | முகம்மது ஷா | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.3 | நித்தியா | கூடுதல் சாட்சி |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.07.2018 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 27.07.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 27.07.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | 27.07.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 07.12.2018 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 07.12.2018 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 07.12.2018 | படிவம் 91 |

**அரசுத் தரப்பு சான்று பொருட்கள் :**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 36 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |

| | |
|---|---|
| அ.சா.பொ.2 | சுமார் 23 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.3 | சுமார் 32 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.4 | சுமார் 29 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.5 | சுமார் 24 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.6 | சுமார் 29செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.7 | சுமார் 28 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.8 | சுமார் 26 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.9 | சுமார் 32 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.10 | சுமார் 27 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.11 | சுமார் 24 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |
| அ.சா.பொ.12 | சுமார் 30 செ.மீ நீளம் கொண்ட சந்தனக்கட்டை–1 |

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம்*** *: இல்லை .*

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.07 18:56:07 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate
Eraniel

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".

Judicial Magistrate, Eraniel in C.C 89/2020